மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

**பேச்சுப் போட்டி 2023**

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

## ஆண்டு 5

அனைவருக்கும் வணக்கம்.......

# நானும் என் தமிழும்

“தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா”

இவ்வரிகளைக் கூறிக்கொண்டே பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கும் நான் ஓர் தமிழன். மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி என் தாய் மொழி. முல்லைக் கொடிக்கு தேர் கொடுத்த வள்ளலும் பசுவுக்காய் தன் மகனை இழந்த மன்னனும் வாழ்ந்த பெருமை கொண்ட மொழி என் தாய் மொழி. என் மொழியின் சிறப்புக்கள் பற்றித் தெரியுமா உங்களுக்கு?
இரண்டடியில் உலகளந்தார் வள்ளுவர் இது என் தாய்மொழியின் அவதாரம்

தொன்மையைத் தொட வேண்டுமா? அகத்தியம் உண்டு எங்களிடம்
இலக்கணம் இயம்ப வேண்டுமா? தொல்காப்பியம் உண்டு எங்களிடம்
யாரையாவது புகழ வேண்டுமா? புறநானூறு உண்டு எங்களிடம்
யாரையாவது அறிய வேண்டுமா? அகநானூறு உண்டு எங்களிடம்
காலில் அணியும் சிலம்புக்கும் உண்டு சிலப்பதிகாரம்
கழுத்தில் அணியும் மணிக்கும் உண்டு மணிமேகலை
காதில் அணியும் குண்டலமாய் குண்டலகேசியும்
கையில் அணியும் வளையலாய் வளையாபதியும்
என்ன இல்லை என் மொழியில் அகத்தியன் தொட்டிலிட்டு, தொல்காப்பியன் தாலாட்டி, கம்பன் சீராட்டி, மூவேந்தர் பாராட்டி என்றும் எல்லா மொழிகளுக்கும் தாயாக விளங்கும் உயர்தனி செம்மொழி அதுவே என் தாய் மொழி தமிழ் எனக் கூறி நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி
வணக்கம்.



ஆக்கம் :
ஆசிரியர் திருமதி. பலோமியற் அன்ரனிஸ்ராலின்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 03.06.2023 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.